சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.109/2021

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | வயது | 72 |
| த/பெ | சுப்பைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காட்டுர், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | ஓய்வு பெற்ற ஆசிரியர் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து இந்த வழக்கு போக வேறு எத்தனை வழக்குகள் உள்ளன என்றால் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளுக்கு இடையே ஒரு வழக்கு உள்ளது. தாவா சொத்துக்களைப் பொறுத்து எங்களுக்கும், 3 வது நபர்களுக்கும் எத்தனை வழக்குகள் உள்ளன என்றால் தெரியாது. தாவா சொத்துக்களில் ஒரு சொத்தின் பக்கத்தில் உள்ள உரிமையாளர்களுக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் அந்த சொத்தைப் பொறுத்து பிரச்சனை ஏற்பட்டு அந்த சொத்தை பாதுகாப்பதற்காக 2 ம் பிரதிவாதிக்கும், பக்கத்தில் உள்ள உரிமையாளர்களுக்கும் அசல் வழக்கு மற்றும் குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். 2 ம் பிரதிவாதி மீது சுமார் எத்தனை குற்றவியல் வழக்குகள் உள்ளது என்றால் 3 வழக்குகள் உள்ளன. அந்த வழக்குகளைப் பொறுத்து நான் 2 ம் பிரதிவாதிக்கு எந்த வித உதவிகளும் செய்யவில்லை என்றால் சரி தான். தாவா சொத்துக்களில் 2 ம் பிரதிவாதி வங்கியில் வாங்கிய கடனை அவர் திருப்பி செலுத்தியதற்கும் நான் எந்த உதவியும் செய்யவில்லை என்றால் 2 ம்

பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தவில்லை. 2 ம் பிரதிவாதி சுமார் 6 முதல் 7 முறை தாவா சொத்துக்களுக்காக வங்கியில் கடன் பெற்று உள்ளார் என்றால் தவறு. இந்தியன் வங்கியிலும், விவசாய கூட்டுறவு வங்கியிலும், இந்தியன் ஓவர் சீஸ் வங்கியிலும் கடன் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த கடனுக்கும், எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. பிராது 4 வது இன சொத்துக்கு 2 ம் பிரதிவாதி பெயரில் தான் கடந்த 30 ஆண்டுகளாக வருவாய் ஆவணங்கள் உள்ளன என்றால் சரியல்ல. 1994 ல் இருந்து தான் உள்ளது. 2 ம் பிரதிவாதி விவசாயத்திற்காகவும், கூட்டுக் குடும்ப சொத்துக்களை காப்பாற்றுவதற்காகவும் தான் என்னுடைய படிப்பு செலவிற்காகவும் கடன் பெற்று உள்ளார் என்றால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகளும் வேலைக்கு சேர்வதற்கு 2 ம் பிரதிவாதி தான் கடன் பெற்று கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் எல்லோரும் வெளியூரில் இருப்பதாலும், 2 ம் பிரதிவாதி மட்டும் உள்ளூரில் இருப்பதாலும் கடன் வாங்குவதற்கும், போக்குவரத்து வசதிக்காகவும் 2 ம் பிரதிவாதி தனது மனைவியும் நகைகளை விற்று கடனை செலுத்தியதாலும், பிராது 4 இன சொத்தைப் பொறுத்து எங்களது உரிமையை 2 ம் பிரதிவாதிக்கு விட்டுக் கொடுத்து விட்டு அவர் பெயருக்கு தனிப் பட்டா ஏற்படுவதற்கு நாங்களும் சம்மதித்ததால் தான் அவர் பெயருக்கு தனி பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதியால் தனிப்பட்ட முறையில் கடனை செலுத்த இயலாத சூழ்நிலை வந்த போது அவர் எங்களை அணுகி கடனை செலுத்துவதற்கு உதவி கேட்ட போது எங்களது பூர்வீக சொத்தும் வேண்டாம், கடனும் வேண்டாம் என மறுத்து விட்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களைப் பொறுத்து 2 ம் பிரதிவாதி மீது இருந்து வழக்குகளை நடத்துவதற்கும், அவர் எங்களிடம் உதவி கேட்ட போது அதற்கும் நாங்கள் மறுத்து விட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் சிறு வயது இருக்கும் போதே எங்கள் தகப்பனார் இறந்து விட்டார் என்றால் சரி தான். அதனால் எங்களை வளர்த்து,

படிக்க வைத்தது எனது தாயாரும், 2 ம் பிரதிவாதியும் தான் என்றால் சரியல்ல. எனது தாயார் தான் எங்களை வளர்த்து படிக்க வைத்தார். எனது தாயார் கடந்த 2012 ம் ஆண்டில் இறந்து விட்டார். அவர் இறந்த பிறகு 2 ம் பிரதிவாதியிடம் சொத்து வேண்டும் என கேட்டேன் என்றால் சரி தான். அதற்கு முன்னரும் கேட்டேன். தாயார் இறந்த பின்னரும் 4 முறை கேட்டு உள்ளேன். 2012 ம் ஆண்டு பாகம் கோரி 2 ம் பிரதிவாதியும் மறுத்து விட்ட போது 2021 ம் ஆண்டில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். பொது சொத்தில் இருந்து வந்த நிதியில் இருந்து நான் நன்றாக படித்து நல்ல வேலையில் இருந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன் என்றால் சரி தான். நான் தற்போது ஓய்வூதியம் பெற்று வருகிறேன் என்றால் சரி தான். நான் தாவா சொத்து இருக்கும் ஊரில் இல்லாமல் நான் நிரந்தரமாக மேட்டுப்பாளையத்தில் சொந்த வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரி தான். 2 ம் பிரதிவாதி சிறு வயதில் இருந்தே கெண்டே பாளையத்தில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரி தான். அவருக்கு தெரிந்து ஒரே தொழில் விவசாயம் மட்டும் என்றால் சரி தான். பிராது 4 வது இன சொத்தை 2 ம் பிரதிவாதி குடும்பத்திற்காக உழைத்ததாலும், கடன்களை கட்டியதாலும், நாங்கள் அனைவரும் அந்த சொத்தை அவருக்கு விட்டுக் கொடுத்து விட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் எல்லாரும் சேர்ந்து சம்மதித்து விட்டுக் கொடுத்ததால் தான் பிராது 4 வது இன சொத்துக்கு அவரது பெயரில் தனி பட்டா உள்ளது என்றால் சரியல்ல. பிராது 8 வது இன சொத்தைப் பொறுத்து எனது தாயார் பெயரில் தனித்த வீட்டு மனை பட்டா உள்ளது என்றால் சரி தான். பிராது 8 வது இன சொத்து கெண்டே பாளையம் கிராமத்தில் உள்ள 4 ½ செண்ட் காலி நிலத்துடன் கூடிய ஓட்டு வீடு என்றால் சரி தான். எனது தாயார் 07.12.1992 அன்று 2 ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எண். 3763/1992 மூலமாக எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் எங்களுக்கு தெரியாமலேயே எழுதி வாங்கிக்

கொண்டார். அந்த சொத்து எனது அம்மாவின் தனிப் பட்ட சொத்து என்றும், அதனை 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுப்பதற்கு யாருடைய அனுமதியும் தேவை இல்லை என்றால் சரியல்ல. பிராது 8 வது இன சொத்தின் மீதும் 2 ம் பிரதிவாதி கடன் பெற்று அந்த கடனை செலுத்தி வருகிறார் என்றால் சரி தான். பிராது 8 வது தபசில் சொத்து போக பிராது 7 வது இன சொத்தில் இன்னும் ஒரு பொது வீடு உள்ளது என்றால் சரி தான். அந்த சொத்தை பராமரிப்பதற்காக வாங்கிய கடனையும் 2 ம் பிரதிவாதி தான் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகளும் வெளியூரில் வேலை பார்த்து விட்டு வெளியூரிலேயே நிரந்தரமாக குடியேறி விட்டார்கள் என்றால் மேட்டுப்பாளையத்தில் நிரந்தரமாக குடியேறி விட்டார்கள். பிராது 4 மற்றும் 8 இன சொத்துக்களில் 2 ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியம் உள்ளது என்றும், எனக்கோ, மற்ற பிரதிவாதிகளுக்கோ அதில் எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் 4 மற்றும் 8 வது இன சொத்துக்களைப் பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

(3 வது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா.கெங்காராஜ்
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.